ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2492/10 - 2026 ජුනි මස 09 වැනි අඟහරුවාදා - 2026.06.09

*2492/10 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

### 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டம்

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 7(1)(இ) மற்றும் பகுதி VI உடன் சேர்த்து வாசிக்கப்படும் 105 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள்.

**பி. நந்தலால் வீரசிங்க,**
ஆளும் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்.

இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு,
2026, யூன் 09.

**ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல்**

1. இவ்விதிகள் “2026ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புகின்ற விதிகள்” என எடுத்துக்காட்டப்படுதல் வேண்டுமென்பதுடன் பாராளுமன்றத்தினால் இவ்விதிகள் ஒப்புதலளிக்கப்படுகின்ற தினத்தில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. 2026 சனவரி 30ஆம் திகதியிடப்பட்ட 2473/30ஆம் இலக்க வர்த்தமானியில் (அதிவிசேட) வெளியிடப்பட்ட 2026ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புகின்ற விதிகளினால் திருத்தப்பட்டவாறு, இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்டதும் 2024 யூலை 01ஆம் திகதியிடப்பட்ட 2391/02ஆம் இலக்க வர்த்தமானியில் (அதிவிசேட) வெளியிடப்பட்டதுமான 2024ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புகின்ற விதிகள் இத்தால் மேலும் திருத்தம் செய்யப்படுகின்றன -

1A - G 46974 - 354 (2026/06)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(அ) அதன் 4ஆம் விதியினை நீக்கி, அதற்குப் பதிலாக பின்வரும் புதிய விதிகளைப் பிரதியீடு செய்வதன் மூலம் -

"4. மேலே 3ஆம் விதியின் நியதிகளின் பிரகாரம், ஏதேனும் கலண்டர் மாத காலப்பகுதியில் இலங்கையில் ஏற்றுமதிப் பெறுகைகளைப் பெறுகின்ற பொருட்களின் ஒவ்வோர் ஏற்றுமதியாளரும் கீழே குறிப்பிடப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் மாத்திரம் அத்தகைய பெறுகைகளைப் பயன்படுத்தியதன் பின்னர் இலங்கையில் கிடைக்கப்பெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளின் எஞ்சியதை அடுத்த மாதத்தின் பத்தாம் (10) திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ இலங்கை ரூபாவாகக் கட்டாயமாக மாற்றுதல் வேண்டும்.

(i.) அதன் ஒரு மாத காலக் கடப்பாடுகள் உள்ளடங்கலாக ஏற்றுமதி வியாபாரத்துடன் தொடர்புபட்ட நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான கொடுப்பனவுகள்;

(ii.) ஒரு மாத காலக் கடப்பாடுகள் உள்ளடங்கலாக அத்தகைய வெளிநாட்டு நாணயக் கடன்/ வசதி 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் அல்லது திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகளின் நியதிகளின் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட கடன்பெறுகையொன்றாக இருக்கின்றவிடத்து, பொருட்களின் ஏற்றுமதியாளரினால் பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களினதும் வசதிகளினதும் படுகடன் தீர்ப்பனவுச் செலவுகள் மற்றும் மீள்கொடுப்பனவு;

(iii.) 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின் பிரகாரம் விடுக்கப்பட்ட பணிப்புரைகளின் கீழ் அனுமதிக்கப்பட்டவாறு, வதிவற்ற முதலீட்டாளர்களுக்குப் பிரகடனம் செய்யப்பட்ட பங்கிலாபங்களின் கொடுப்பனவுகள் அத்துடன்/ அல்லது வெளிநாட்டுத் தேசத்தவர்களாக அல்லது இரட்டைப் பிரசாவுரிமையாளர்களாகவுள்ள வெளிநாட்டிலுள்ள ஊழியர்களுக்கான சம்பளங்களின் கொடுப்பனவுகள்;

(iv.) ஏற்றுமதி வியாபாரத்துடன் தொடர்பான பயண நோக்கங்களுக்காக வெளிநாட்டு நாணயத் தாள்களிலான எடுப்பனவு அல்லது நிதியங்களின் மாற்றல்;

(v.) அவ்வாறு கிடைக்கபெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளின் பத்து சதவீதம் (10%) வரை இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் பெயர்குறிக்கப்பட்ட படுகடன் பிணையங்களில் முதலீடுகளை மேற்கொள்வதுடன் தொடர்புடைய கொடுப்பனவுகள்; அத்துடன்

(vi.) 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின் பிரகாரம் விடுக்கப்பட்ட பணிப்புரைகளின் கீழ் அனுமதிக்கப்பட்டவாறு வெளிநாட்டு நாணயத்தில் கடப்பாடுகளைக் கொண்டுள்ள பொருட்கள் மற்றும் பணிகள் என்பவற்றின் நேரடியற்ற ஏற்றுமதியாளர்களுக்கான கொடுப்பனவுகள்.

(ஆ) அதன் 6ஆம் விதியினை நீக்கி, அதற்குப் பதிலாக பின்வரும் புதிய விதிகளைப் பிரதியீடு செய்வதன் மூலம் -

"6. ஏதேனும் கலண்டர் மாத காலப்பகுதியில், மேலே 4 (vi)ஆம் விதியின் நியதிகளுக்கமைவாக ஏற்றுமதிப் பெறுகைகளிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவுகளைப் பெறுகின்ற பொருட்கள் மற்றும் பணிகளின் ஒவ்வொரு நேரடியற்ற ஏற்றுமதியாளரும் 4(i) தொடக்கம் (v) வரையான விதியில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் மாத்திரம் அதனைப் பயன்படுத்தியதன் பின்னர் அத்தகைய கிடைப்பனவுகளின் எஞ்சியவற்றை அடுத்த மாதத்தின் பத்தாம் (10) திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ இலங்கை ரூபாவாகக் கட்டாயமாக மாற்றுதல் வேண்டும்.

EOG 06 - 0079

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.